Chundikuli Branch Library
-8-1991
16-8-1991


# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 117 இதழ் : 14 16–08–1991 (ஆகஸ்ட் 16—ஆகஸ்ட் 30) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50


### திருத்த வேலை

சென்ற ஆண்டு ஜூலை 30 இல் விமானக் குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த யாழ். புனித மரியன்னை பேராலயம் இவ்வாண்டும் மாரி மழையில் மேலும் அழிந்து போகாதிருக்க அதனைத் திருத்தும் முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### பரிசுத்த ஆட்சிப்பீடத்திற்கு ஒக்டோபர் மாதத்தின் முதல் ஞாயிறு திருப்பலி காணிக்கை

# நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு இறைமக்கள் பங்களிப்பிற்கு அழைப்பு

**பரிசுத்த ஆட்சிப்பீடத்தில் நிதி நிலைமையை சமாளிப்பதற்கு துணைபுரியும் முகமாக யாழ். மறைவட்டத்திலுள்ள ஆலயங்களில் ஒக்ரோபர் மாதத்தின் முதல் ஞாயிறு திருப்பலி காணிக்கைமூலம் நிதி உதவி செய்யுமாறு யாழ். ஆயர் மறைவட்டக் குருக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஏப்ரல் மாதத்தில் வத்திக்கானில் உலகெங்குமுள்ள ஆயர் பேரவைத் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோது பரிசுத்த ஆட்சிப்பீடத்தின் நிதி நெருக்கடி பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டது.

பரிசுத்த ஆட்சிப்பீடத்தின் நிதி நிலமையைச் சமாளிக்க அது ஆயர் மன்றங்களின் உதவியை நாடியிருக்கிறது. தலத்திருச்சபை ஆயர்கள் இறைமக்களிடமிருந்து நன்கொடைகளைப்பெற்று, உலகின் பல்லேறு பாகங்களில் திருச்சபை மேற்கொண்டுவரும் பணிகளுக்குத் தேவையான பெரும் தொகைப்பணத்தை சேகரிக்க உதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆயர் இது பற்றி தமது குருக்களுக்கு அறிவித்ததுடன் ஒக்ரோபர் மாதத்தில் வரும் முதல் ஞாயிறு தினத்தன்று இதற்கான நிதியை இறைமக்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கிறிஸ்தவர்களுக்குரிய தனிப்பட்ட சட்டங்களில் மாற்றம் தேவை

(யூக்கன் செய்தி)

அண்மையில் விஜயவாடாவில் ஒன்றுகூடிய அகில இந்திய கத்தோலிக்க சங்கத்தின் கூட்டத்தில் கத்தோலிக்கருக்குரிய தனிப்பட்ட சட்டங்கள் காலங்கடந்தவையும் பாரபட்சமுள்ளனவாயும் இருப்பதால் அவை மாற்றியமைக்கப்பட வேண்டுமென ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

சங்கத்தின் தலைவராகிய திரு. சோட்டிபாய் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த மக்களுக்கென அரசாங்கத்தினால் கல்வி, உத்தியோகம் ஆகியவற்றில் அளிக்கப்படும் சலுகைகள் அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால் அளிக்கப்படுவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டி இந்தப் பாரபட்சம் நீக்கப்பட வேண்டுமென்றார்.

விவாகம், மணமுறிவு, தத்து எடுத்தல், தாயகவுரிமைபற்றிய சட்டங்கள் ஒருநூற்றாண்டுக்கு முன் ஆக்கப்பட்டனவாகையால் அவை திருத்தியமைக்கப்பட வேண்டுமென்றும் அவர் கூறினார்.

திருச்சபையால் செல்லுபடியற்ற தாக்கப்பட்ட விவாகங்களை மணமுறிவுக்கு ஓர் ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்றும், சகல கிறிஸ்தவர்களுக்கும் ஒரே விதமான சட்டம் இருக்கவேண்டுமென்றும் அக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## துஷ்பிரயோகத்தைத் தடுக்க நடவடிக்கை

பிலிப்பைனிலிருந்து ஹொங்கொங்கிற்கு வேலை தேடிச் செல்லும் வீட்டுப் பணியாளருக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு அவர்களுக்கு வேலை தேடித்தரும் பணியையும் அரசாங்கமே மேற்கொண்டுள்ளது. ஹொங்கொங் அரசாங்கத்துடன் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பெண்கள் வேலை பெறுவதற்காகச் செலுத்தும் பணமும் கணிசமான அளவு குறைகின்றது. 50,000த்துக்கு மேற்பட்ட பிலிப்பினோ பெண்கள் ஹொங்கொங்கில் வீட்டுப் பணியாளராகப் பணிபுரிகின்றனர்.

ஹொங்கொங்கைத் தவிர மத்தியகிழக்கு நாடுகளிலும், சிங்கப்பூரிலும், ஜப்பானிலும் இதைவிட மோசமான நிலைமைகளில் பிலிப்பினோ பெண்கள் வேலை செய்கின்றனர் ஆனால் இவர்கள் விடயத்தில் செயலாற்றுவது அரசாங்கத்துக்குக் கஷ்டமாக உள்ளது.

பிலிப்பைனில் போதிய வேலை வாய்ப்பின்மையால் ஆண்டு தோறும் சுமார் 500,000 பேர் பிற நாடுகளில் வேலை வாய்ப்புத் தேடுகின்றனர். இவர்களது ஊதியம் நாட்டுக்கு பெரும் வருவாயைத் தேடித்தந்த போதிலும் நீண்டகால நோக்கில் இது நாட்டுக்கு பல பாதகமான விளைவுகளை கொண்டுவரும் எனக் கருதப்படுகிறது.

## குருத்துவ வாழ்வின் பொன் விழா



யாழ். அமல உற்பவத்தில் ஓய்வு பெற்று வரும் அருள் திரு. எல். யோசவ் அ. ம. தி. அடிகள் சென்ற 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தமது குருத்துவ வாழ்வின் 50 ஆண்டு நிறைவை எய்தினார்.

யாழ். குருநகர் பங்கைச் சேர்ந்த இவர் 1914 மே 17இல் பிறந்து 1941 ஆகஸ்டு 6இல் பேரருள் திரு. கியோமார் ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

மண்டைதீவு, தாளையடி, பள்ளிமுனை, மிருசுவில் நெடுந்தீவு, கரவெட்டி, வவுனியா, மாதகல் ஆகிய பங்குகளில் பங்குத்தந்தையாக அரும்பணியாற்றிய அருள் தந்தையின் சேவைநலத்தைப் பாராட்டி அவர் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திப்போம்.

## ராஜிவின் சிலை

திருச்சூரில் கிறிஸ்தவ கருத்துள்ள சிலைகளை உருவாக்கி வரும் அருட் சகோதரர் முன்னாள் பிரதமர் திரு ராஜிவ் காந்தியின் உருவச் சிலையை பரிஸ் களியில் உருவாக்கியுள்ளார்.

மூன்று அடி உயரமான இந்த மார்பளவுச் சிலை, இதுபோன்ற சிலைகளை அமைப்பதற்கு ஒரு மாதிரியாகச் சீமேந்தில்செய்யப் பட்டுள்ளது

அருட்சகோதரர் பேர்க்மன் மலாபார் மறைபோதக சபையில் சேர்ந்தபின் ஒரு கலையகத்தை ஆரம்பித்து பல புனிதர் சிலைகளையும், ஆலயங்களுக்குத் தேவையான பிற சிற்பங்களையும் உருவாக்கிவந்துள்ளார்.

சிற்பத்தில் மட்டுமல்லாது நாடகங்களுக்கு பின்னணித் திரை அமைப்பதிலும் அருட் சகோதரர் பேர்க்மன் பேர் பெற்றவர்.

## ஐ. நா. சபை பொருளாதார சமத்துவத்துக்காக உழைக்கவேண்டும்

ஐ. நா. சபைத்தின் ஞாபகார்த்தமாக புது டெல்லியில் ஐ நா சபையின் இந்தியக்கிளை ஜுன் 25 ஆம் திகதி ஒழுங்கு செய்த கருத்தரங்கொன்றில் உரையாற்றிய முன்னாள் வெளிநாட்டமைச்சின் செயலாளர் திரு. வெங்கடேஸ்வரன் இன்று உலகம் பொருளாதார சவால்களை நோக்குகின்றது என்று ஐ. நா. வின் வருங்காலப் பணிகள் இராணுவரீதியிலல்ல பொருளாதார ரீதியிலுள்ளன என்றும் கூறினார்.

ஐ. நா. சாசனத்தின் குறிக்கோள் போரிலிருந்து எதிர் கால சந்ததிகளைப் பாதுகாப்பது என்றாலும், இன்றைய நிலைமையில் பிற காரியங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியிருக்கிறது என இலங்கைத் தூதர் திரு. கனகரத்ன கூறினார்.

தமது கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்காகவே எத்தனையோ நாடுகள் மேலும் கடன் வாங்கவேண்டியிருக்கிறது என்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் மூன்றாம் மண்டல நாடுகளுக்குமிடையேயுள்ள பொருளாதார இடைவெளியைக் குறைப்பதே இன்றைய அவசிய தேவை என்றும் அவர் மேலும் கூறினார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம்கருத்து

### சூழ்நிலைக்கேற்ப முக்கியத்துவம்

வத்திக்கானில் ஜூன்20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 27 பக்கங்களைக்கொண்ட 'கலந்துரையாடலும் மறை அறிவிப்பும்' என்ற புதிய ஏடானது திருச்சபையின் அண்மைக்கால பிரச்சினைகளுக்கு விடை பகர்வதாக அமைந்துள்ளது.

இந்த ஏடானது கிறிஸ்தவமல்லாத மதங்களோடு உரையாடல் நடத்துவதை ஆதரிக்கும் அதேவேளை திருச்சபையின் இன்றைய பணியில் மறை அறிவிப்பிற்குப்பதிலாக உரையாடல் இடம் பெறவேண்டும் என்று கருதுவோரின் தவறான எண்ணத்தையும் திருத்த முனைகிறது.

2 ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பு திருச்சபை பிற மதங்களைப் பற்றிக் கொண்டிருந்த கொள்கையானது இப்போது உள்ள கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. ஆனால் 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் கொள்கை மாற்றத்தினால் கடந்த 2000 ஆண்டுகளாக கடைப்பிடிக்கப் பட்டுவந்த அணுகுமுறைகளில் மாற்றம் ஏற்பட்டது.

2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் கொள்கைகள் வெளியிடப்பட்டு 25 ஆண்டுகள் ஆகுகின்ற போதிலும் அதன் புரட்சிகரக் கொள்கைகளால் ஏற்பட்ட தாக்கத்தால் திருச்சபையில் பல மாற்றங்கள் எழுந்தன. இவை மாற்றங்களாக மட்டுமன்றி தடுமாற்றங்களாகவும் இருந்தன என்றால் மிகையாகாது.

புதிய அணுகுமுறைகளை கைக்கொண்ட வேளையிலே பழையதை முற்றுமுழுதாகத் தூக்கி எறிய முனைந்தவர்களும், பழமையைப் போற்றியவர்களும் தத்தமது போக்குகளை இறுகப்பற்றிப் பிடிக்க முனைந்தனர். இதனால் குழப்ப நிலை அதிகரித்தது.

இக்குழப்ப நிலையானது திருச்சபையில் பல்வேறு மட்டங்களில் எழுந்த போதிலும், குறிப்பாக பிற மதங்களோடு திருச்சபை கொண்டிருந்த உறவைப் பொறுத்த மட்டில் அது விசேடமான ஒரு பிரச்சினையாக உருவெடுத்தது.

2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின்பு திருச்சபை முன்னொருபோதும் நினைத்தும் பார்க்க முடியாத அளவுக்கு பிற மதங்களோடு உரையாடலில் ஈடுபட்டது. பிற மதத்தவர்களின் சமயப் பாரம்பரியங்களில் சிறந்த மதிப்பீடுகள் உள்ளன என அவற்றைப் போற்றியதோடு அவற்றைத் தழுவிக்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது.

புதிய ஏட்டின் முதலாம் பாகமானது பிற மதங்களைப் பற்றி திருச்சபை கொண்டுள்ள அபிப்பிராயங்களை விளக்குகிறது. அத்துடன் 2 ஆம் வத்திக்கான் சங்கம் அவற்றை அங்கீகரித்ததைச் சுட்டிக்காட்டி அவை திருச்சபை பிற மதங்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட சிறந்த அடித்தளமாக விளங்குகின்றன என்கிறது.

இரண்டாம் பாகமானது உலகிற்கு கிறிஸ்துவை அறிவிக்க வேண்டியதன் அவசியத்தை திருச்சபை உணரச் செய்கின்றது. அத்துடன் திருச்சபையானதுதான் கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட இப்பணிப்புரையிலிருந்து நழுவமுடியாது என்றும், எத்தடைவரினும் அதை நிறைவேற்றவேண்டும் என்றும் கூறுகின்றது.

மூன்றாம் பகுதியானது மறைஅறிவிப்பிற்கும், கலந்துரையாடலுக்கும் இடையே உள்ள உறவை ஆராய்கிறது. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாயினும் ஒன்றை ஒன்று பிரதியீடு செய்ய முடியாது. ஆனால் அவை இரண்டுமே திருச்சபையின் கடமைகளாக இருக்கின்றன. இருப்பினும் வெவ்வேறு சந்தர்ப்ப சூழ்நிலைகளில் இவற்றில் ஒன்று மற்றையதைவிட முக்கியத்துவம் பெறமுடியும் என விளக்குகின்றது.

எனவே நாமும் குழப்பமடையாது முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்ப சூழ்நிலைகளை உணர்ந்து செயற்படுவோம்.

# கலந்துரையாடலும் மறையறிவிப்பும்

மதிப்புடன் கூடிய நற்செய்திப்பணியானது கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருச்சபை நடத்தும் உரையாடலைப் புரிந்து கொள்வதோடு சமத்துவமுடையது என்று வத்திக்கான் வெளியிட்ட புதிய ஏடு ஒன்று தெரிவிக்கின்றது.

''உரையாடலும் மறை அறிவித்தலும்:- மதங்களுக்கிடையிலான உரையாடல்- கிறிஸ்துவின் நற்செய்தியைப் பற்றிய சிந்தனைகள்'' என்னும் இந்த வத்திக்கான் ஏட்டில் ''இவையிரண்டும் முறையானவையே ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையே, ஆனால் ஒன்றுக்கொன்று பரிமாறக் கூடியவையல்ல.'' என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஏடு யூன் 20 ஆம் திகதி வத்திக்கானில் வெளியிடப்பட்டது. மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் பேராயத்தோடு சேர்ந்து மதங்களுக்கிடையிலான உரையாடலுக்கான திருத்தந்தையின் சபை இதைத் தயாரித்தது. இந்த ஏடானது கிறிஸ்தவமல்லா மதங்களோடு உரையாடல் நடத்துவதை ஆதரிக்கின்றது. அதே வேளையில் திருச்சபையின் இன்றைய பணியில் நற்செய்தி அறிவிப்புக்குப் பதிலாக உரையாடல் இடம் பெறவேண்டும் என்று கருதுவோரின் தவறான எண்ணத்தையும் திருத்த முனைகிறது. 27 பக்கங்களைக் கொண்ட இந்த ஏட்டில் மதங்களுக்கிடையிலான உரையாடல் சபையின் தலைவரான கருதினால் அரின்சியும், நற்செய்திப்பணிப் பேராயத்தின் தலைவரான கருதினால் யோசப் ரொம்கோவும் கைச்சாத்திட்டுள்ளனர்.

பிறமதங்களைச் சேர்ந்தவர்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனுக்குலத்தின் ஒரு பாகமாக இருப்பதாலும் இறைவனில் முழுமையான வாழ்வு என்னும் பொதுவான ஒரு இலக்கை நோக்கி அழைக்கப்பட்டுள்ளதாலும் திருச்சபை பிறமதங்களோடு உரையாடலில் ஈடுபட்டுள்ளது என்று அந்த ஏடு கூறுகின்றது. தனிநபர்களின் சமய வாழ்க்கையில் மட்டுமல்லாது அவர்களது சமயப் பாரம்பரியங்களிலேயே தக்க மதிப்பீடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொண்டமையினாலேயே பிறமதங்களுக்கு மதிப்பளித்தலும் அவைகளோடு கூடுதலான புரிந்துணர்வை ஏற்படுத்துவதும் நிகழ்ந்துள்ளன என மேலும் அவ்வேடு தெரிவிக்கின்றது. தமது திருவார்த்தையின் மூலம் இறைவன் பிரசன்னமாகிச் செயலாற்றுவது பரிசுத்தஆவியின் செயற்பாடும் இத்தக்க மதிப்பீடுகளுக்குக் காரணம் என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறியுள்ளது. சகல ஆண்களுக்கும், பெண்களுக்கும் கிறிஸ்துவில் மீட்பு என்ற ஒரே மீட்புத் திட்டத்தைத்தான் இறைவன் கொண்டிருக்கின்றார் என்று கத்தோலிக்க திருச்சபை போதிக்கின்றது. ஆனால் கிறிஸ்துவே அதன் ஊற்று என்று ஒருவர் உணராதிருந்த போதிலும் மீட்பின் மறைபொருள் அனைவருக்கும் அளிக்கப்படுகின்றது. கிறிஸ்துவைத் தமது மீட்பர் என அறியாமலோ ஏற்றுக்கொள்ளாமலோ இருப்பவர்களும் கூட பிறமதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தால் தமது சமயப் பாரம்பரியங்களில் நன்மையானவற்றை நேர்மையுடன் அநுசரிப்பதாலும் தமது மனச்சாட்சியின்படி நடப்பதாலும் கிறிஸ்துநாதருடைய மீட்பை ஏற்றுக் கொள்ள இறைவன் விடுக்கும் அழைப்பிற்குத் தக்கபடி பதிலிறுக்கின்றனர்.

பிறமத பாரம்பரியங்களில் இறையருளுக்கான அம்சங்கள் உண்டு என்று கூறுவதால் அவற்றிலுள்ள எல்லாம் இறையாளின் விளைவென்பது பொருளல்ல. ஆகவே பிறமதத்தவர்களோடு உரையாடலில் ஈடுபட்ட கிறிஸ்தவர்கள் அவர்களுடைய சமய நம்பிக்கையைப் பற்றி அமைதியான முறையில் சவால் விடுக்க நேரிடலாம். அதே வேளையில் கிறிஸ்தவர்களும் தம்மைப் பற்றிக் கேள்விகள் எழுப்பப் படுவதை அனுமதிக்கவேண்டும். யேசுக்கிறிஸ்துவில் இறைவனின் முழுமையான வெளிப்பாட்டைப் பெற்றிருந்த போதிலும் கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் தமது மதத்தை விளங்கிக்கொள்ளும் விதமும், அனுசரிக்கும் விதமும் தூய்மைப்படுத்தப்பட வேண்டி இருக்கலாம்.

மதங்களுக்கிடையிலான உரையாடல் பரஸ்பர புரிந்துணர்வையும், நட்புறவையும் மட்டுமே நாடுவதில்லை அது தமது விசுவாசத்தைக் குறித்து ஒருவருக்கொருவர் சான்று பகர்ந்து தமது சமய நம்பிக்கைகளைப் பொதுவில் ஆராய்ந்து இருவருக்கும் ஒரு ஆழமான உளமாற்றம் ஏற்பட வழி செய்கிறது, இந்த உரையாடல் மூலம் கிறிஸ்தவர்கள் தமது சொந்த விசுவாசத்தை இன்னும் நன்றாக விளங்கிக் கொள்வதாலும், உலகிலுள்ள அனைத்து மக்களிலும் இறைவன் செயலாற்றுகிறார் என்பதைக் கண்டுணர்வதாலும் கிறிஸ்தவர்களுக்கு இந்த உரையாடலின் மூலம் நன்மையே ஏற்படுகிறது.

கிறிஸ்துவில் மீட்பை அறிவிக்க கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடமை உண்டு. ஆனால் அது தனி நபருக்கு மதிப்புக் கொடுக்கும் விதத்தில் செய்யப்பட வேண்டும், ஏனெனில் மறைபரப்புப்பணி ஒரு வெற்றிடத்தில் நடப்பதல்ல, திருச்சபையின் மறைபரப்புப்பணி செயற்படுவதற்கு முன்னரே நற்செய்தியைப் பெறுவோருக்கிடையில் கிறிஸ்துவின் தூய ஆவி பிரசன்னமாயிருந்து செயற்படுகிறார். அவர்கள் ஏற்கனவே எத்தனையோ சந்தர்ப்பங்களில் இறைவனின் இக்கொடைக்கு உள்ளார்ந்த விதத்தில் பதில் அளித்திருக்கலாம். அவர்களது சொந்த சமய பாரம்பரியங்கள் அவை தக்க பெறுமதியுடையவையாக இருந்தால் அவற்றை அவர்கள் நேர்மையாக அனுசரிப்பதே இதற்கு அடையாளமாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் தமது மறையறிவித்தலில் கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும். அவர் படிப்படியாக மிகுந்த கவனத்துடனேயே தன்னை வெளிப்படுத்தினார். ஒழுக்கமுள்ள வாழ்வு வாழும் தனிநபர்கள், உரையாடலில் ஈடுபடும் திருச்சபை சமூகசேவை, நீதிக்கும் சமாதானத்திற்குமாக உழைத்தல் இவையனைத்தும் மறைபரப்புப்பணியின் முக்கிய அம்சங்களே. ஆனால் நற்செய்தியை மக்கள் கேட்டு அதற்குப் பதிலிறுக்கும் சாத்தியக்கூறு இருக்குமாயின் அவர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வது திருச்சபையின் கடமையாகும். இந்த அறிவிப்பு சாத்தியமாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மதங்களுக்கிடையிலான உரையாடல் மூலமாகவும், சான்று பகர்வதன் மூலமும் நற்செய்தி மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும், சுதந்தரத்திற்கு மதிப்பளித்து திருச்சபை தனது பணியைத் தொடர்கிறது.

## பொன் மொழிகள்

நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தேடி அலையாதீர்கள். அவை உங்களுக்கு அருகிலேயே உங்களுக்குள்ளேயே, உங்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. இதை உணர்ந்து அவற்றை வளர்த்துக் கொள்பவன்தான் புத்திசாலி. — ஜேம்ஸ் ஓபனஹிம்

சந்தேகத்தினாலும், பயத்தினாலும் வாழ்க்கையை வீணாக்காமல் உங்களுக்குள்ள பணியைச் செய்து முடிப்பதில்.- நேர்மையான பாதையில் உறுதியுடன் நின்று முடித்துக் காட்டுங்கள். ஒவ்வொரு மணி நேரத்திலும் எந்த அளவிற்குச் சிறப்பாகக் கடமைகளைச் செய்து முடிக்கிறீர்களோ அந்த அளவிற்கு எதிர்காலத்தைப் பிரகாசம் மிக்க தாய் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். — எமர்ஸன்

இறைவன் நேர்மையைக் காண நமக்கு அருவியிருப்பதைப் போல யாரிடமும் தீராப் பகை கொள்ள வேண்டாம். எல்லோரும் தர்ம குணத்தோடு வாழவேண்டும். உண்மையில் உறுதிப்பாடு கொள்ள வேண்டும். — ஆபிரகாம் லிங்கன்

இளமை என்னும் அகராதியில் தோல்வி என்ற சொல்லுக்கே இடம் கிடையாது. — இலிட்டன்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# இளைஞனே! அமைதிக்கு வழி ஏது?




முயற்சியில் முன்னேற்றம் இல்லையா? எமது கருத்துக்களை ஏற்க சமூகம் மறுக்கிறதா? சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படுவதற்கு எது காரணம்? இன்றைய மறை உணர்வுகள் மழுங்கடிக்கப்பட்டுமனிதத்துவமே மரணிக்கவும் சவாலாய் இருப்பதற்கு என்ன காரணம்?

உண்மையில் நாம் எந்த விடயத்திலும் எமது கருத்துக்கள், கொள்கைகள், செயல்களை வலியுறுத்த முனையும் போது பிறரிடம் அதனை கட்டாயப்படுத்தி திணிப்பதனை எம்மை அறியாமலே செய்து வருகிறோம். அதனை உணராமல் மற்றவர்கள் ஏற்கமறுத்தால், கவர மறுத்தால், செய்ய மறுத்தால் வேதனை அடைகிறோம். சிலசமயங்களில் வெறுப்படைந்து ஒதுங்க முற்படுகின்றோம்.

எதனையும் சொல்லும் பண்பு, செய்யும் பணிவு மூலம் தான் உணர்த்தமுடியும் என்பதனை உணரத்தவறுகிறோம். இதற்குத்தான் எமக்கு கற்றுத்தந்த அருள்வாக்கு உவமை நன்கு பயன் உள்ளதாய் அமைகின்றது. எந்த உணவுக்கும் உப்பு அவசியமானது. அந்த உப்பு இல்லா பண்டம் குப்பையிலே என்பார்கள் நம் முதியோர் அது எளிதில் கரைந்து சுவையைத் தருகிறது. அந்த உப்பே அதிகமாகிவிட்டால் அதனை சுவைக்கவோ, அப்பொருளை மகிழ்வுக்காக பயன் படுத்தவோ, முடியாத நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

அது போலத்தான் எமது வாழ்விலும் கிறிஸ்துவை மையப்படுத்தி சுவைபடுத்தி இறைவார்த்தையோடு இணைந்த வாழ்க்கையினை வாழவேண்டும். அதன் மூலமே பயன் தரும் கிறிஸ்தவ விழுமியங்களை மற்றவர்களும் அறிந்து அந்த சுவையில் அவர்களும் இணைந்து மகிழ நாம் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு எமது வாழ்க்கையினை உப்பாக உலகுக்கு படைக்கலாம். எமக்கு பிடிக்காத கருத்துகள், பொருள்கள் இருப்பின் அதைப்பற்றி கலந்து பேசி கருத்துப் பரிமாற்றத்தினை ஏற்படுத்துவதால் எமது சந்தேகங்களை தீர்த்து சந்தோசங்களை ஏற்படுத்தலாம்.

இன்றைய இளைய தலைமுறையின் சாதனைக்கு சவாலாக அமையும் சோதனைகளை வெல்ல தன் தவறுகளை ஏற்று வாழ வாழ்வில் அடிப்படை ஆன்மீக பற்றுதல் முக்கியமானது. அதன் மூலமே ஆறுதல், அமைதி, நின்மதிக்கான வழிகளை காண முடியும்.

அந்தவாழ்வில் வழிகாட்டும் நற்போதனைகளை காட்டும் நற்செய்திகள் எமது வாழ்வோடு இணைந்திருத்தலே நல்ல பண்புள்ள மனிதநேயத்தை உருவாக்கும். அந்த நல்ல கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும்போது, மற்றவர்களிடம் திணிப்பதாகவோ, வற்புறுத்துவதாகவோ அமைதல் கூடாது. எமது வாழ்க்கையில் இறைவார்த்தைகள் இணைந்து கொண்டாலே அந்த பகிர்வை செய்துகொள்ளலாம்.

சோதனை தகர்த்து, சாதனை படைக்க
ஆன்மீக வழியில் அமைதி அடைய
இளைஞர் உலகில் ஒன்றுபடுவோம். — சூசை

# அமைதியைத் தந்திடவா!

அருள் வாழ்வைத் தந்திடவும்
மன இருள் போக்கி புது ஒளி பெற்றிடவும்
வந்துவிடு! தந்துவிடு! உள்ளத்து அமைதியையே!
பொய்மை ஒளி அகற்றிடவும்
உள்ளொளி மங்காது வீசிடவும்
வந்துவிடு! தந்துவிடு! உள்ளத்து அமைதியையே!
நல்லவற்றை நாம் நன்றாகச் செய்திடவும்
நற்செயல்களால் உம்மை சாற்றிடவும்
வந்துவிடு! தந்துவிடு! உள்ளத்து அமைதியையே!
சண்டை சச்சரவு நீங்கிடவும்
மக்கள் மனதில் அன்பொளி வீசிடவும்
வந்துவிடு! தந்துவிடு! உள்ளத்து அமைதியையே!
அநீதிச் சாட்சியங்கள் ஒழிந்திடவும்
நீதி நியாயங்கள் நிலைத்திடவும்
வந்துவிடு! தந்துவிடு! உள்ளத்து அமைதியையே!
வன்பின் வல்லமையை உடைத்திடவும்
அன்பின் அறத்தை வளர்த்திடவும்
வந்துவிடு! தந்துவிடு! உள்ளத்து அமைதியையே!

அருளமலன்
நாவாந்துறை

# இன்பச் சோலையிலே

திருநூலின் முதற் புத்தகமாகிய ஆதியாகமத்தைப் புரட்டும்போது அதன் இரண்டாம் அதிகாரத்தில் ஓர் இன்ப வனத்தின் உருவாக்கமும், அதன் அமைப்பு, நோக்கம் போன்றவை விபரிக்கப் படுவதைக் காண்கின்றோம். ''ஆண்டவராகிய கடவுள் ஆதியிலே ஓர் இன்ப வனத்தை நட்டிருந்தார், தாம் உருவாக்கிய மனிதனை அதில் வைத்தார்.

இந்தப் பகுதியை வரையும் யாவே பாரம்பரிய ஆசிரியர், கடவுளை ஒரு தோட்டக்காரனாக மனித கண்ணோட்டத்திற் படம் பிடித்து, ஒரு மனிதன் மகிழ்ச்சியாக வாழ்வதற்குத் தேவையான அனைத்தையும் அந்த தோட்டத்தில் கடவுள் நிறுவுதாகக் காட்டுகின்றார்.

ஆகவே தான், அதற்கு ''ஏதேன் தோட்டம்'' என்று பெயரிடப்படுகின்றது. 'ஏடன்' என்ற எபிரேய வார்த்தைக்கு இன்பம், மகிழ்ச்சி, சுகம் என்று நாம் பொருள் கொள்ளலாம். இச்சொல்லைப் பிரயோகித்து அதை இன்பச் சோலையாகக் காட்டுகின்றார் வேதாகம ஆசிரியர். இதை நாம் தமிழில் ''இன்ப வனம்'' என்கின்றோம் கடவுள் மனிதனை முதன் முதலில் வாழவைத்த இடம் இன்பந்தரும் சோலையாக இருந்தது, அதாவது, மனிதன் இறைவனோடு கொண்ட முதல் உறவு இன்பமயமானது என்ற ஆழ்ந்த கருத்தை வெளிப்படுத்தவே ஆசிரியர் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகின்றார்.

இனிமை நிறைந்த கனிகளைச் சுமந்த மரங்களையும், பாலைவனத்தைச் சோலையாக்கும் தருக்களையும், அவற்றிற்கு உயிரூட்டம் அளிக்கச் சலசலத்தோடும் அருவிகளையும் அங்கே உருவாக்கிய இறைவன் அந்த இன்ப வனத்தின் நடுவில் வாழ்வளிக்கும் மரத்தையும், நன்மை தீமை அறியும் மரத்தையும் வளரச் செயதார் என்பதையும் காண்கின்றோம்.

இன்பம் தரக்கூடிய அனைத்தையும் ஸ்தாபித்த இறைவன் ஏன் நன்மை— தீமை அறியும் மரத்தை அதன் நடுவில் நாட்டவேண்டும்? அதன் கனியை உண்ணக் கூடாது என்று ஏன் கட்டளை கொடுக்க வேண்டும்? இஃது இந்நிகழ்ச்சியோட்டத்தில் ஒரு தேக்கமாகத் தோன்றலாம்.

ஆனால், வேதாகம ஆசிரியரின் உள்நோக்கத்தையும், கருத்தோட்டத்தையும் உற்று நோக்குங்கால், எல்லாம் வல்ல இறைவன் தமது படைப்புக்களின் சிகரமாகிய மனிதனுக்கு எது நன்மையானது— எது தீமையானது என்பதைத் தீர்மானிக்கும் உரிமையும், கடமையும் கொண்டவர் என்பதையும், அதே வேளையில் அவர் மனிதனின் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பவர் என்பதையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுவதைக் காண்கின்றோம். ஆகவே தான், அவர் அவனுக்குக் கட்டளை கொடுக்கின்றார் — அக்கட்டளையிலும் அவனைச் சுயமாகச் சிந்தித்துத் தீர்மானம் எடுக்க விட்டு விடுகின்றார் — அவன் தவறான முடிவைத் தன் வாழ்க்கை நிலைப்பாடாகக் கொள்ளும்போது அவனைத் தண்டிக்கும் உரிமையையும் எடுத்துக் கொள்கின்றார்.

'வளனான்'

# காவலன் கண்மணிகள்

| ஒளி: 5<br>சுடர்: 1 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |
|---|---|

**என்னகம் : 2**

**அன்புக் கண்மணிகாள்!**

பால யேசுவின் அன்பு என்றும் உங்களை வழி நடத்தும். அச்சமிகுந்த இந்நாளில் அவரின் அன்புக் கரத்தைப் பற்றி அச்சமின்றி வாழ 500 ஆண்டு நிறைவு கொண்ட புனித லொயோலா இஞ்ஞாசியாரின் விருப்பு மிகு செபத்தை இங்கு தருகிறேன்,

''ஆண்டவரே, எனது விருப்பம், எனது ஞாபகம், எனது புத்தி, எனது சித்தம், முழுவதையும் ஏற்றுக்கொள்ளும், எனது இருப்பையும், என்னிடம் உள்ளவை அனைத்தையும் நீரே எனக்களித்தீர். இவற்றை உமது திருவுளத்தின் முன் எடுத்து வைக்கிறேன். என்னை வழிநடத்தும். உமது அன்பையும் அருளையும் மட்டும் எனக்குத்தாரும். இவற்றுடன் நான் போதிய அளவு செல்வாக்குள்ளவன் என்பதனால் வேறு எதையும் நான் கேட்கமாட்டேன்.''

போர்த் தளபதியாக கோட்டைகாத்த வீரர் இவர் காலில் குண்டடிபட்டு முறிந்தகாலோடும் உடைந்த உள்ளத்தோடும் இறைவழி தேடினார். இறைகரம் கிடைத்தது. அதன் பலன் இயேசுசபை உருவாகியது. இவரின் வரலாற்றை ஒவ்வொரு கண்மணிகளும் கற்றிருக்க வேண்டும். காலம் நேரம் வரும் போது அவர் வரலாறு இங்கு வரும்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

உங்கள் அன்பின்
அன்பு விழி

## பெற்றோரும் கண்மணிகளும்

கண்மணிகளை கண்ணின் இமை போல
காக்கும் தந்தையரே!
கட்டுப்பாடும் கண்டிப்பும்
கணக்கான அளவுடன் உங்கள்
கண்மணிகளுக்கு அவர்கள்
கலங்கா வண்ணம் கற்பியுங்கள்.
கற்பின் சிகரங்களாய்
கண்மணிகளை இவ்வுலகில் தந்த தாய்மாரே!
கண்மணிகள் மீது சந்தேகம் வேண்டா!
கண்ணின் மணிகள் போல் காத்து
கண்ணிறைந்த ஆதரவுடனும், நம்பிக்கையுடனும்
காத்து நடத்துங்கள்.
கல்லுள்ளம் கொண்ட கண்மணிகளே!
பித்துள்ளம் கொண்ட பெற்றோரை
மதித்து பணிந்து நடவுங்கள்.
கல்வி எனும் விருட்சத்திற்கு
கண்ணீரைத் தாரையாக இறைத்து
கண்சிமிட்டும் தாரகையாக மின்னிடுங்கள்.

அனித்தா ஷாலினி பிரான்சிஸ்
அங். எண் : 44

**கூறுங்கள் பார்க்கலாம் :**

(1) ஆசிரியர் கூறுவது, அளக்க உதவுவது.
(2) மலர்களால் ஆனது, பிற்பகல் ஆனது.
(3) சிந்தனையைத் தூண்டுவது, சிறுவர் வேண்டுவது.
(4) கடலில் எழுவது, அரங்கில் ஆடுவது.

விடை அடுத்த இதழில்

**சிந்திக்க :**

இயற்கை

இயற்கையின் நியதியில் சூரியனுக்கும், சந்திரனுக்கும்,
நட்சத்திரங்களுக்கும் நோக்கம் இருக்கும்போது,
என் பிறப்புக்கும் ஒரு நோக்கம் இருந்தாக வேண்டும்.

கவிஞர் கண்ணதாசன்

பாதுகாவலன்
PATHUKAVALAN

# உயர்நீதிமன்றம் தடையை நீக்கியது

(யூக்கன் செய்தி)

கடந்த ஆண்டில் கேரள நீதிபதியொருவரால் தடை செய்யப்பட்டிருந்த இயேசுக் கிறிஸ்து பற்றிய இசை நாடகத்துக்கு இருந்த தடையை இந்திய உயர்நீதி மன்றம் நீக்கி அதனை மேடையேற்ற அனுமதித்துள்ளது. கோட்டயத்திலுள்ள கிறிஸ்தவ பாடசாலையொன்றினால் அவர்களது ஆண்டு விழாவிற்கென தயாரிக்கப்பட்ட இந்நாடகம் கிறிஸ்தவர்களின் உணர்வைப் புண்படுத்தக் கூடுமென தடை செய்யப்பட்டது.

பாடசாலையின் அதிபரான மேரி றோய் இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதி மன்றத்துக்கு முறையிட்டார். உயர்நீதிமன்றம் அந்நாடகத்தை பாடசாலை மாணவருக்கும், பெற்றோருக்கும் அதை ஒரு முறை மேடையேற்ற அனுமதி அளித்துள்ளது.

உலகின் பல நகரங்களில் மேடையேற்றப்பட்ட இந்நாடகம் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. இதில் இயேசுநாதரின் பாத்திரம் சித்திரிக்கப்பட்ட விதத்தைக் குறித்து பல எதிர்ப்புக்கள் எழுப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கப்பூர் பேராயரின் கோரிக்கை

பரிசுத்த ஆட்சிப்பீடத்தின் நிதி நிலைமையை சமாளிப்பதற்கு துணைபுரியுமுகமாக ஞாயிறு திருநாட்களில் சேர்க்கப்படும் பணத்தில் 5 வீதத்தைக் கொடுத்துதவுமாறு சிங்கப்பூர் பேராயர் கிறகறியொங் சகல பங்குகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்துலக திருச்சபையின் பணிகளுக்கு நிதிப் பற்றாக்குறை காரணமாக இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளதென்றும் கத்தோலிக்க மக்கள் தாராளமாகக் கொடுத்துதவி திருத்தந்தையினதும் பரிசுத்த ஆட்சிப்பீடத்தினதும் நிதி நெருக்கடியைச் சமாளிக்கத் துணைபுரிய வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஜப்பானில் கிறிஸ்தவம் 1971-1990 வெளியீடு

இருபது ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் தேசிய கிறிஸ்தவ சங்கம் ஜப்பானிலுள்ள கத்தோலிக்க, புறொட்டஸ்தாந்து திருச்சபைகளின் புள்ளி விபரத் திரட்டு ஒன்றை வெளியிட்டுள்ளது. 1903 ஆம் ஆண்டிலிருந்து வருட வெளியீடாக புறொட்டஸ்தாந்து திருச்சபைகளால் வெளியிடப்பட்டு வந்த இந்த ஏடு அச்சபைகளுக்குள் ஏற்பட்ட வேற்றுமை காரணமாக 1970 ஆம் ஆண்டுக்குப் பின் வெளிவரவில்லை.

1969–70 ஆம் ஆண்டு ஏட்டில் கத்தோலிக்க திருச்சபை பற்றிய விபரங்கள் முதன் முதலாக இடம்பெற்றன. தற்போது வெளிவந்த ஏட்டிலும் கத்தோலிக்க திருச்சபை பற்றிய விபரங்களும், கட்டுரைகளும் அடங்கியுள்ளன.

## இந்து விழிப்புணர்ச்சி திருச்சபைக்கு ஓர் அச்சுறுத்தல் அல்ல

இந்தியத் தேர்தல்களின் முன் கத்தோலிக்க ஆயர் பேரவை கத்தோலிக்க மக்களுக்கு விடுத்த தேர்தல் அறிவுறுத்தல்கள் சில அரசியற் கட்சிகளுக்கு சில தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தியுள்ளது. அதில் குறிக்கப்பட்டுள்ள சில அம்சங்கள் தம்மையே சுட்டிக் காட்டுவதாக அவை நினைக்கின்றன. ஆனால் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரான பேராயர் மத்தயாஸ் தாம் எக்கட்சியையும் குறிப்பிடவில்லையென்றும் தாம் இன ஒற்றுமை, மதச்சுதந்திரம் ஊழலின்மை போன்றவற்றை உடைய கட்சிகளையே ஆதரிக்குமாறு கூறியுள்ளதாகவும் தெரிவித்தார். சில கத்தோலிக்கர் பாரதீய ஜனதா கட்சியின் கொள்கை இந்நாட்டை இந்துமயமாக்குவது என்று கருதுகின்றனர்.

ஆனால் இக்கட்சியின் தலைவர்கள் தாம் இந்து என்று குறிப்பிடுவது சகல இந்தியர்களையும் உள்ளடக்குமென்றும், அது இந்துப் பண்பாட்டைக் குறிக்குமே ஒழிய மதத்தைக் குறிக்கவில்லை என்றும் கூறியுள்ளனர்.

ஆயினும் முஸ்லிம்களின் ஜனத்தொகைப் பெருக்கமும், உலகம் முழுவதும், இஸ்லாத்தின் பலம் அதிகரித்து வருவதும் தமக்கு ஓர் அச்சுறுத்தலாக இருப்பதாக இக்கட்சியின் உபதலைவரான கிருஷ்ண மூர்த்தி கூறியுள்ளார்.

## பரிசுத்த ஆட்சிபீடத்துக்கு 1வீத நன்கொடை

பரிசுத்த ஆட்சிப்பீடத்தின் நிதிநெருக்கடியைக் குறைக்கும் முகமாக தாய்வான் ஆயர்கள் தமது மறைமாவட்ட வருமானத்தில் 1வீதத்தை திருஆட்சிப்பீடத்துக்கு அளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஆனி 15 ஆம் திகதி விடுக்கப்பட்ட தமது மடலில் ஆயர் போல் ஷண்குவோஷி தாய்வானிலுள்ள 290000 கத்தோலிக்க மக்களுக்கு இதனை அறிவித்துள்ளார். அத்துடன் புனித இராயப்பர் திருநாளன்று திரு ஆட்சிப்பீடத்தின் பணிகளுக்கென சேர்க்கப்படும் காணிக்கைக்குத் தாராளமாகக் கொடுத்துதவும்படியும் கேட்டுக் கொண்டார்.

உலகின் பல்வேறு பாகங்களில் திருச்சபை மேற்கொண்டு வரும் பணிகளுக்கு பெருந்தொகையான பணம் தேவைப்படுகின்றது. இதனை உலகெங்குமுள்ள விசுவாசிகளே திரட்டிக் கொடுக்கவேண்டும். அத்துடன் திருத்தந்தைக்காகவும் அவரது கருத்துகளுக்காகவும் செபிக்கவும் வேண்டும்என ஆயர் குவோ ஷி கூறினார்.

## பொதுநிலையினர் இயக்கங்களுக்கு தேசிய மட்டத்தில் கருத்தரங்கு

''திருச்சபையின் சமூகக் கொள்கையானது இறையரசைக் கட்டியெழுப்ப விழைகின்றது. இதைக் கட்டியெழுப்புவதற்கு முதன்மை அளித்தால், திருச்சபை தானே வளரும்''

திருத்தந்தை 13 ஆம் சிங்கராயரின் ''மூலதனமும் தொழிலும்'' பற்றிய சுற்றுமடலின் நூறாவது ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தமாக நடந்த ஒரு கருத்தரங்கின் போது கொழும்பு மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வுக் குழுக்களின் ஆன்ம வழிகாட்டியாகிய பிதா ஷெல்டன் பெர்னான்டோ மேற்கண்டவாறு கூறினார்.

திருச்சபையை மேனிலைப்படுத்த நீதி இன்றியமையாதது. அப்போஸ்தலபணி, நற்செய்திப்பணி ஆகியவற்றில் நீதியும் அடங்கும் என்று அவர் மேலும் கூறினார்.

பொதுநிலையினர் இயக்கங்களுக்கு சமூகச் சுற்றுமடல்களை உணர்த்துவதற்காக 1992 இல் தேசிய மட்டத்தில் ஓர் கருத்தரங்கு திட்டமிடப்படுவதாக குருநாகல் ஆயர் பேரருட்திரு றேமண்ட் பீரிஸ் தெரிவித்தார்.

### 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எல்மோ மனோஜான் மரியநாயகம்

பிறப்பு 23–03–1976 அழிப்பு 24–08–1990

இரக்கத்தின் இறைவா!

துடிதுடிக்க எம்மிடமிருந்து பிரிக்கப்பட்ட எம் பாலகனை உமது கருணைக்கண் கொண்டு நோக்கியருள வேண்டுமென மன்றாடுகின்றோம்.

''கல்லறையில் உனை வைத்து
கையாலே மண்ணிட்டு
கண்ணீரால் அதை நனைத்து
கதறியே அழுது நின்றோம்.
உள்ளத்தில் உனைவைத்து
பரிதவித்து தவிக்கிறோம்.''

இவரின் ஆன்ம சாந்திக்காக 24–08-1991 காலை 6மணிக்கு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும் அன்பு அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார், பேரன், உறவினர், நண்பர்கள். A/23/91

### 1 ஆம் வருட நினைவு



அருட் செல்வி.
யூபிறேசியா லம்பேட்

தாயின் மடியில் 18-12-1941
முதல் அர்ப்பணம் 18- 2-1961
இறைவன் அடியில் 13- 8-1990

''எல்லாம் இறைவனின் மேலான மகிமைக்கே''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் ஆகஸ்டு 13 ஆம் திகதி துக்கப் பாடற் பூசை அருட்திரு எமில் யோசெவ் O. S. B. அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும். இவரின் ஆன்மா சாந்தி அடைய வேண்டிக் கொள்ளவும். நன்றி.

இவரின் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள், அருட்செல்வி. இனிகா, நண்பர்கள் A/26/91

### ஓர் ஆண்டு நினைவு
16-08-1991



போ. ஞானப்பிரகாசம் ஜே.பி.
ஒளியில் அறிமுகம் 19-12-1900
இருளில் சங்கமம் 16-08-1990

தனக்கென வாளா பிறர்க்
குரியாளனாக வாழ்ந்து
தன்னலமற்ற சேவையால்
தனக்கென ஓர் இடத்தை
தரணியில் சமைத்து
விண்ணுலக அழைப்பை ஏற்று
மண்ணுலகிற்கு வித்தாகிவிட்ட
எமது அன்புத் தந்தையே
ஆண்டவனிடத்தில் எமக்காக
வேண்டியருளும்

மக்கள், மருமக்கள்

சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்:

### மறைக்கல்வி நிலையம் நடாத்தும், வேதாகம கட்டுரை — பேச்சுப் போட்டிகள்

- ★ யாழ். மறைவட்டத்தில் உள்ள சகல பங்குகளிலுமிருந்து தகுதியானவர்கள் இதில் பங்கு கொள்ளலாம்.
- ★ இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.
- ★ பிரிவு 1 — 12 வயதிற்கு உட்பட்டவர்கள்.
- ★ பிரிவு 2 — 16 வயதிற்கு உட்பட்டவர்கள்.
- ★ பிரிவு 3 — 20 வயதிற்கு உட்பட்டவர்கள்.
- ★ 1991-01-01க்கு உட்பட போட்டியாளர் வயதுகணிக்கப்படும்
- ★ போட்டிக்கான தலைப்புகள் கொடுக்கப்படும்.
- ★ போட்டிகளில் வெற்றிபெறும் போட்டியாளர்க்கு (முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்க்கு) தகுதியான பரிசில்கள் வழங்கப்படும்.
- ★ போட்டி விதிகளுக்கு அமைவாக நடவாதவர்கள்—போட்டியில் இருந்து நிராகரிக்கப்படுவர்.
- ★ இப்போட்டிக்கான விண்ணப்பப் பத்திரங்கள் இம்மாதம் ஆவணி 25ஆம் திகதிக்குமுன் அனுப்பப்படல் வேண்டும்.
- ★ விண்ணப்பப் பத்திரங்களையும்—போட்டிக்கான தலைப்புகளையும் பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ மேலதிக விபரங்களுக்கு உங்கள் பங்குத் தந்தையிடம் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்
மறைக்கல்வி நிலையம்

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

## உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்